# டிசம்பர் – 03 – திங்கள்

## புனித பிரான்சிஸ் சவேரியார்

### “நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன்” ( மத் 8:8)

------------------------------------------------------------------

**முதல் வாசகம் : ஏசாயா 2 : 1 – 5**

யூதாவையும் எருசலேமையும் குறித்து ஆமோட்சியின் மகன் எசாயா கண்ட காட்சி இறுதி நாள்களில் ஆண்டவரின் கோவில் அமைந்துள்ள மலை எல்லா மலைகளுக்குள்ளும் உயர்ந்ததாய் நிலை நிறுத்தப்படும் எல்லாக் குன்றுகளுக்குள்ளும் மேலாய் உயர்த்தப்படும் மக்களினங்கள் அதைநோக்கிச் சாரை சாரையாய் வருவார்கள். வேற்றினத்தார் பலர் அங்கு வந்து சேர்ந்து ”புறப்படுங்கள் ஆண்டவரின் மலைக்குச் செல்வோம் யாக்கோபின் கடவுளின் கோவிலுக்குப் போவோம். அவர் தம் வழிகளை நமக்குக் கற்பிப்பார் நாமும் அவர் நெறிகளில் நடப்போம்” என்பார்கள். ஏனெனில், சீயோனிலிருந்தே திருச்சட்டம் வெளிவரும் எருசலேமிலிருந்தே ஆண்டவரின் திருவாக்கு புறப்படும். அவர் வேற்றினத்தாரிடையே உள்ள வழக்குகளைத் தீர்த்து வைப்பார் பல இன மக்களுக்கும் தீர்ப்பளிப்பார் அவர்கள் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள், ஓர் இனத்திற்கு எதிராக மற்றோர் இனம் வாள் எடுக்காது அவர்கள் இனி ஒருபோதும் போர்ப்பயிற்சி பெற மாட்டார்கள். யாக்கோபின் குடும்பத்தாரே, வாருங்கள் நாம் ஆண்டவரின் ஒளியில் நடப்போம்

**பதில்பாடல் :** உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்

**நற்செய்தி : மத்தேயு 8 : 5 – 11**

அக்காலத்தில் இயேசு கப்பர்நாகுமுக்குச் சென்றபோது நூற்றுவர் தலைவர் ஒருவர் அவரிடம் உதவி வேண்டி வந்தார். ”ஐயா, என் பையன் முடக்குவாதத்தால் மிகுந்த வேதனையுடன் படுத்துக் கிடக்கிறான்” என்றார். இயேசு அவரிடம், ”நான் வந்து அவனைக் குணமாக்குவேன்” என்றார். நூற்றுவர் தலைவர் மறுமொழியாக, ”ஐயா, நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் என் பையன் நலமடைவான். நான் அதிகாரத்துக்கு உட்பட்டவன். என் அதிகாரத்துக்கு உட்பட்ட படைவீரரும் உள்ளனர். நான் அவர்களுள் ஒருவரிடம் ”செல்க” என்றால் அவர் செல்கிறார். வேறு ஒருவரிடம்” வருக” என்றால் அவர் வருகிறார். என் பணியாளரைப் பார்த்து” இதைச்செய்க” என்றால் அவர் செய்கிறார்” என்றார். இதைக்கேட்டு இயேசு வியந்து, தம்மைப் பின்தொடர்ந்து வந்தவர்களை நோக்கி, ”உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் இஸ்ரயேலர் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை. கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோப்பு ஆகியோருடன் விண்ணரசின் பந்தியில் அமர்வர் என்றார்.

**தியானம்:** பாலக யேசுவின் பிறப்பை ஆயத்தம் செய்யும் இக்காலத்தில் நாம் எமது உள்ளங்களை ஆயத்தம் செய்ய இன்றைய வாசகங்கள் எமக்கு அழைப்பு விடுக்கின்றன. பொதுவாக நாம் நம்மை சுற்றியுள்ள இடங்களையும் பொருட்களையும் சுத்தமாக வைத்திருக்க ஆசைப்படுகின்றோம். சில சிறிய வீடுகள் பார்ப்பதற்கு மிகவும் நேர்த்தியாகவும் அழகாகவும் இருக்கும். பெரிய வீடுகள் பொருட்களால் நிரப்பப்பட்டு சிறிய வீடுகள் போல் காட்சி அழிக்கும். இடத்திற்கு ஏற்றவாறு நாம் பொருட்களை தெரிவு செய்தால் எந்த சிறிய வீட்டையும் பெரியதாக மாற்றலாம். எமது மனங்களும் அவ்வாறுதான். பலவிதமான பொருட்களால் நிரம்பி வழிகின்றது. இவற்றில் தேவையற்ற பொருட்களை நாம் அப்புறப்படுத்தினால் எம் மனங்களும் அழகாக இருக்கும். தேவையற்ற பொருட்கள் என்ன? பேராசை, பொறாமை, வன்மம், கோபம், பகைமை போன்றவை. இவை எம் மனங்களை ஆழுகை செய்தால் அங்கே வெற்றிடம் இருக்க முடியாது. இடம் இல்லாத ஒன்றில் யேசு எப்படி வந்து தங்க முடியும்? இன்றைய நாள் நாம் நினைவு கூரும் புனித சவேரியார் தமது மனதை வெற்றிடமாக ஆக்கியதால்தான் அங்கே இறைவன் குடி கொண்டார். உலகை ஆதாயமாக்கினாலும் ஆன்மாவை இழப்பின் அதனால் பயன் என்ன என்ற வார்த்தை அவரை தொட்டதால் தன்னை கடவுளின் ஊழியராக அர்ப்பணித்தார் கல்வி அறிவு செல்வம் எல்லாம் இருந்தும், அவரிடம் எதுவும் இருக்க வில்லை என்று நினைத்தார். இறைவனை மட்டும் துணையாக கொண்டு பணி செய்தார். இந்திய தேசத்தில் கிறிஸ்த்தவம் மலர காரணமாக இருந்தார். எனவே அவர் அடி ஒற்றி வாழ நாமும் அழைக்கப் பட்டுள்ளோம். யேசு எம் உள்ளத்தில் வரநாம் தகுதி உடையவர்களா?